1977 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பில்லை, காரணம், ஓட்டுநர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள், ஆகவே சிக்கல் ஏற்படும். எனவே உறுப்பினர் யோசனையைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பஸ்களிலே திருவள்ளுவர் படம் வைத்திருப்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தக் குறள்களை யாரும் மனப்பாடம் செய்வதில்லை, பள்ளிக்கூடங்களிலே எஸ்.எஸ்.எல்.சி.-யிலேயே தவறான விளக்கங்கள் செய்யப்படுகின்றன. ஆகவே அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா? அதோடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காந்தி, நேரு, ஜீவானந்தம் போன்றவர்களுடைய படங்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருவள்ளுவர் படத்தை மட்டுமே பேருந்துகளிலே வைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறறது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்தி வைப்புத் தீர்மானம்.

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமுன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 2—8—1977 முதல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக முன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவையின் பிற

அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ச. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, அரசுடைமை யாக்கப்பட்ட இந்தப் பேருந்துகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் புதிய சிக்கல்கள் எழுந்துள்ளன. நெருக்கடி காலத்தில் ஒழுங்கு நடவடிக்கைகள் என்று எடுக்கப் பட்டு, எடுத்ததற்கெல்லாம் குற்றச்சாட்டுகள், எடுத்ததற்செல்லாம் டிரான்ஸ்ஃபர் என்ற அளவிற்குச் செய்து எந்த அளவிற்கு அவர்களை இழிவுபடுத்த முடியுமோ, எந்த அளவிற்கு அவர்களைக் கொடுமைப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குச் செய்து வந்தார்கள். இன்றைக்குத் தேர்தல் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் வந்துவிட்ட பிறகு கோயம்புத் தூரிலுள்ள அந்தத் தொழிலாளர்கள் பரிகாரம் காண முயல் கின்றார்கள். அவர்களுடைய பொருளாதார நிலையைப்பற்றி விஷயம் ஒருபுறமிருக்க, "transfer, retrenchment, ill treatment and humiliation" இம்மாதிரி பிரச்னைகள் அவர்களுடைய மனிதாபிமான உணர்வுகளையே பாதிக்கின்ற அளவிற்கு இருப்பதால், நான் அறிந்த வரையில் இப்படிப்பட்ட சிக்கல்களுக்கெல்லாம் இதுதான் காரணம் என்று அறிகிறேன்.

அவர்கள் மேற்கொண்டும் பல பிரச்னைகளை வைத்திருக் கிறார்கள். வேஜ் கமிஷன் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக் கிறார்கள். இங்கேயேகூட பேசினார்கள். அவர்களுக்கு என்று தனியாக ஒரு சப்பளக் கமிஷன் அமைப்பதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அதையெல்லாம் நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் கொண்டு வர விரும்பவில்லை.

இப்பொழுது புதிதாக என்ன பிரச்னை வந்திருக்கிறது என்று சொன்னால், இந்தக் கோரிக்கைகளை அமல் நடத்த வேண்டுமென்று நடத்திய போராட்டத்தில் தலையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது முதல் கோரிக்கை. கொடுத்த வாக்குறுதிகளையாவது நிறைவேற்றுங்கள் என்ற கோரிக்கை புதிதாக முளைத்திருக்கிறது. இதில் காலதாமதம் செய்தால் மேலும் கோரிக்கைகள் வந்து கொண்டே இருக்கும்.

இப்பொழுது உண்ணாவிரதம் மேற்கொள்கின்ற அளவிற்கு நிலைமைகள் இருந்தன. அவற்றைப் பரிசீலனை செய்து இப்படிப்பட்ட போராட்டங்கள் மற்ற இடங்களுக்கும் பரவாமல் தடுக்க வேண்டும். இங்கே கூட வேலைநிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாப் பக்கத்திலும் பரவுவதற்கு முன்னால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு பரிசிலனை செய்து தீர்வு காண்பதற்கான அவசியம் இருப்பதால் இதைப்பற்றி விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பது மிகவும் நல்லது என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர்களே, 5—5—1977 அன்று சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஆறு ஊழியர்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சியாளரின் தலையீட்டின் பேரில் 7—5—1977 அன்று தங்கள் உண்ணாவிரதத்தை விலக்கிக் கொண்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்று கூறுகின்ற உண்ணாவிரதம் இருப்பவர்கள் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்படாத தொழிலாளர்கள். உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள நபர்கள் யாரும் மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி தற்போது சேரன் போக்குவரத்துக் கழகத்தின் தொழிலாளிகள் அல்லர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2—8—1977 அன்று காலை கோவையில் கீழ்க்கண்ட மூன்று பேர் கோவை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின்முன் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்:—

1. திரு. மொய்தீன் பாட்சா: இவர் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 25 வருடம் ஓட்டுநராகப் பணி செய்த பின் கட்டாய வேலை நீக்கத் திட்டத்தின் கீழ் திறமைக் குறைவின் காரணமாக 6—5—1976-ல் வேலை நீக்கம் செய்யப்பட்டவர் ஆவார். இவருக்குச் சேர வேண்டிய பணிக்கொடையை gratuity 9—6—1976 அன்று பெற்றுக்கொண்டு விட்டார். வருங்கால சேமநிதியை 10—8—1976 அன்று பெற்றுக் கொண்டார். வேலை நீக்கத்தை எதிர்த்து மனு ஒன்றும் இவர் போடவில்லை. தொழில் அதிகாரி முன் இவர் தொழில் தகராறை எழுப்பவில்லை.

2. திரு. சுப்புசிங்: சேரன் போக்குவரத்துக் கழகத்தின் நடத்துநராகப் பணி புரிந்தவர். 28—11—1974 அன்று பிரயாணிகளிடம் கட்டணம் வசூலித்த பிறகு பயணச் சீட்டு கொடுக்காததினால், தக்க நடைமுறைகளைக் கையாண்ட பிறகு சேரன் போக்குவரத்துக் கழகத்தினால் 14—6—1975 அன்று வேலை நீக்கம் செய்யப்பட்டார். வேலை நீக்கத்தை எதிர்த்து இவர் நிர்வாக இயக்குனருக்குப் போட்ட மனு 27—6—1975 அன்று நிராகரிக்கப்பட்டது. 6—8—1975 அன்று இவர் தனக்குச் சேர வேண்டிய வருங்கால சேமநிதியைப் பெற்றுக் கொண்டுவிட்டார். தொழில் தகராறு ஒன்றும் இவர் எழுப்பவில்லை.

3. திரு. மைக்கேல்துரை: இவர் சேரன் போக்குவரத்துக் கழகப் பணியாளர் அல்ல.

இம்மூவரும் 4—8—1977 அன்று கைது செய்யப்பட்டு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும் மூன்று நபர்கள் 5—8—1977 முதல் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள். அவர்களுடைய விபரம் கீழ் வருமாறு—

1. திரு. பி. ஆர். பழனிச்சாமி (மாஜி நடத்துநர் சேரன் போக்குவரத்துக் கழகம்: இவர் பயணக் கட்டணம் வசூலித்த பிறகு பயணச்சீட்டு வழங்காமல் இருந்ததால் வேலை நீக்கம் செய்யப்பட்டவர் ஆவார். இவர் தொழிலதிகாரி முன் தொழில் தகராறு எழுப்பவில்லை.

2. திரு. எஸ். நாச்சிமுத்து (மாஜி நடத்துநர் சேரன் போக்குவரத்துக் கழகம்): இவரும் பயணக் கட்டணம் வசூலித்த பிறகு பயணச்சீட்டு வழங்காமல் இருந்ததால் 3—11—1976 அன்று வேலை நீக்கம் செய்யப்பட்டார். இவரது தொழில் தகராறு 7—5—1977 அன்று தொழிலதிகாரியால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

3. திரு. ஜோசப் என்பவர்: இவர் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளியே அல்ல.

1977 ஆகஸ்ட் 8] *[திரு. சி. பொன்னையன்]*

> மேற்குறிப்பிட்ட மூன்று பேரும் காலவரையறை இல்லாமல் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். நேரில் பேசுவதன் மூலம்தான் அவர்களுடைய குறைகளைத் தெளிவாகத் தெரிந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க இயலும் என்ற எனது கருத்தை அவர்கட்குத் தெரியப்படுத்தியதனால் அவர்கள் உண்ணாவிரதத்தை 5—8—1977 அன்று மாலை நிறுத்திவிட்டார்கள் என்ற தகவல் வந்துள்ளது. இன்று அவர்கள் என்னைச் சந்திக்க உள்ளார்கள்.

எனவே, பேரவையின் ஏனைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து, மேற்குறித்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இம்மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: அமைச்சரைச் சந்திக்க அவர்கள் சென்னை வந்திருப்பது நல்ல முடிவு. அமைச்சரவர்கள் நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால், அவர்கள் தொழிலாளர்கள் அல்ல என்று சொல்வது சரியல்ல. ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் அவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள், நிர்வாகத்தால் அவர்கள் பழிவாங்கப்பட்டவர்கள் என்பதைக் கவனத்தில் நிறுத்தி, பரிவுடன் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அந்த ஆறு தொழிலாளிகளில் நான்கு தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள். இரண்டு தொழிலாளிகள் போக்குவரத்துத் துறைக்கே எந்தவித சம்பந்தமும் இல்லாமல் இருப்பவர்கள் என்றுதான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்று கூறி, இதற்கு இசைவு தர மறுக்கிறேன்.